உ

சிவமயம்

# திருக்கைலாய பரம்பரை
# மெய்கண்டார் ஆதீனம்
## இலங்கை



(மெய்கண்ட தேவநாயனார் சிவஞானபோதம் சேர்க்கப்பட்டுள்ளது.)

ஆசிரியர்: வ. செல்லையா.

இலங்கை மெய்கண்டார் ஆதீன

**வெள்ளிவிழா வெளியீடு**

**1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

சைவப் பாதுகாப்பு
சமய சமரச சேவை.

[illegible] ஆதீனம்
அம்மன் வீதி, பண்டாரக்குளம்
வவுனியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருக்கைலாய பரம்பரை
# மெய்கண்டார் ஆதீனம்
# இலங்கை



**மெய்கண்ட தேவ நாயனார்**

(மெய்கண்ட தேவநாயனார் *சிவஞானபோதம்*
சேர்க்கப்பட்டுள்ளது.)

*ஆசிரியர்:*

*ஞானசிரோமணி, சைவப்புலவர் மணி, ஞானக்கவிமணி; வித்துவான்.*

***வ. செல்லையா.***

## இலங்கை மெய்கண்டார் ஆதீன
## வெள்ளிவிழா வெளியீடு
## 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. சிறப்புப்பாயிரம் -- 03
2. நூன்முகம் -- 04
3. ஈழத்தில் சைவாதீனங்கள் -- 05
4. ஆதீனக்குருமுதல்வரின் நற்சிந்தனை -- 08
5. சைவ ஆதீனங்களின் பங்களிப்பு -- 11
6. திருக்கைலாய சந்தானாசிரிய பரம்பரை -- 13
7. தருமபுர ஆதீனத்தின் பங்களிப்பு -- 15
8. தொண்டை மண்டல ஆதீனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் -- 16
9. காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம் உ௨௯ஆவது குருமகாசந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள். -- 18
10. முதற்குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள். -- 20
11. மெய்கண்டார் ஆதீனத்தின் பணிகள் -- 21
12. வவுனியாவில் மெய்கண்டார் ஆதீனம் -- 22
13. மெய்கண்டார் ஆதீனப் பணிகளில் இருபத்தைந்து ஆண்டுகள். -- 26
14. மெய்கண்டார் ஆதீனத்தின் சேவைகள் -- 31
15. மெய்கண்ட தேவநாயனார் அருளிய சிவஞானபோதம் -- 33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெ லாம் "

திருக்கைலாச பரம்பரை

# மெய்கண்டார் ஆதீனம்

சிலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருமகா சந்நிதானம்

## 1997 - ஆதீனத்தின் வெள்ளி விழா ஆண்டு

## மெய்கண்டார் ஆதீனக் குருமுதல்வர் வழங்கிய சிறப்புப் பாயிரம்

உலகம் போற்றும் உயர்சைவ சமயம்
பலரும் வாழ்த்திப் பரவஆ தீனம்
மெய்கண் டாரின் மேன்மைப் பெயரில்
தெய்வச் செயலெனத் திகழும் வண்ணம்
காஞ்சி ஞானப் பிரகாச மாமுனி
வாஞ்சை யுடனே தாபிதம் செய்தனர்
அன்ன வரைப்போல் ஆதீனம் இதனைக்
கன்னற் சுவைதரு கனிதரு மொழியால்
மீளவும் தாபித்து மிளிரவும் செய்து
வெள்ளி விழாவை விருப்புடன் வாழ்த்தி
அள்ளு சுவைசேர் வரலாறும் தந்தனன்
ஆழமும் அகலமும் செறிந்த சைவன்
வாழும் தமிழை வளர்க்கும் வள்ளல்
கற்றோர் மற்றோர் மதிக்கும் கவிஞன்
சிற்றம் பலவன் சீரடி பரவும்
முத்தமிழ் வல்ல முதுமகா வித்துவான்
சித்தாந்த ஞான சிரோமணி யான
வையகம் போற்றும் தெய்வப் புலவன்
செல்லையா வென்னும் சிவமயச் செல்வனே.

ஞானப்பிரகாச சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நூன்முகம்

சைவத்தின் இரு கண்களாக விளங்குபவை ஆலயமும், ஆதீனமுமாகும். ஆலயத்தில் இறைவன் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றான். ஆதீனத்தில் குருமுதல்வர் பரமாச்சாரியராக வீற்றிருந்து அருளொளிபரப்புகின்றார். ஆலயத்தைக் கண்டதும் கரங்கூப்பித் தொழல்வேண்டும். சிவவேடந்தாங்கி நிற்கும் குருமுதல்வரையும் கரம்குவித்து மனங்கொண்டு தொழவேண்டும்.

நமக்கு ஆலயங்களை வணங்கிப் பழக்கமுண்டு. ஆதீனத்தையோ குருமுதல்வரையோ நாம் அறியோம். வணக்கம் செய்து பழக்கமுமில்லை. இந்தியாவிலேயே ஆதீனங்கள் பலதோன்றிச் சைவபணிபுரிந்து வருகின்றன. இலங்கையில் அதனைக் கண்டறிவாருமில்லை. கேட்டறிந்தாருமில்லை. யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆதீனங்கள் இரண்டு தசாப்தத்திற்கு முன்தோன்றிச் சமய சேவையில் ஈடுபட்டு வருகின்றன. அங்கு பலரும் ஆதீனம் பற்றித் தெரிந்திருக்க நியாயமுண்டு.

வவுனியாவில் சென்றாண்டு தீபாவளித்திரு நாளன்றுதான் மெய்கண்டார் ஆதீனம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் வரவேற்கப் பட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

வவுனியாவில் இவ்வாதீனம் சைவப்பணியை மேற்கொண்டு வருகிறது. அது ஆற்றிய இருபத்தைந்து வருடப்பணியை நினைவு கூருமுகமாக வெள்ளிவிழாவை 31–10–97இல் நடாத்தவுள்ளது. அதனை முன்னிட்டு "கைலாய பரம்பரை மெய்கண்டார் ஆதீனம்" என்ற நூலை வெளியீடு செய்கிறோம். அதன்மூலம் ஆதீனம் பற்றிய விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம். யாவரும் இந்நூலைப் பெற்றுப் படித்துப்பயன் பெறவேண்டுகிறோம்.

**வகியகம்**
**19B, U.C குவாட்டேஸ்**
**மன்னார் வீதி,**
**வவுனியா.**
**18–10–97**

இங்ஙனம்

**வ. செல்லையா**

**மேழிவாசம், இளவாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஈழத்தில் சைவ ஆதீனங்கள்

சைவ சமயஸ்தாபனங்களில் முதன்மையானவை சைவ ஆதீனங்கள். ஈழத்திருநாடாம் இலங்கையைப் பொறுத்தவரையில் சைவாதீனங்கள் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே ஆரம்பிக்கப் பட்டன. முன்னர் சைவப்பணிகளை ஆலயங்களும், வித்தியாலயங்களும், மடாலயங்களும், சைவச்சங்கங்கள், சபை களுமே புரிந்து வந்துள்ளன.

சென்ற நூற்றாண்டுக்கும், இந்த நூற்றாண்டுக்கும் தொடர்புடைய சைவத்தமிழ்ப் பேராளன் ஆறுமுகநாலவர் அவர்களும், ஒரு தனிமனிதாக நின்றே சைவத்தமிழ்ச் சாதனை புரிந்திருக் கின்றார்கள். அவர்களுக்கு இரு நாட்டுத் தொடர்பிருந்தும், தமிழ் நாட்டில் சைவாதீனங்களின் சேவைகளை அறிந்திருந்தும், சைவா தீனங்கள் அவர்களின் சேவையறிந்து பட்டம் வழங்கிப் பாராட்டி யிருந்தும் ஈழத்தில் சைவாதீனங்கள் நிறுவிப் பணியாற்றாது இருந்தமை எங்களுக்குப் புரியாத ஒன்றாகவே உள்ளது.

எனது நால்வர் நெறியில் நாவலர் என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கிய புலவர்மணி முரு.பழ.இரத்தினம் செட்டியார் அவர்களும் நாவலர் அவர்களைக் குறிப்பிடும் பொழுது "ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பணியை நாவலர் பெருமான் ஒரு தனி மனிதனாய் நின்று ஆற்றியிருக்கின்றார்" என்று குறிப்பிட்டிருக் கின்றார். இது நாம் சிந்தனை செய்யவேண்டிய விஷயம். நாவலர் பெருமான் சிவபதமடைந்த போது நம்நாட்டறிஞர் ஒருவரும் "நாவலரைப்போல் இனி ஆள் இல்லை" என்று கவலைப்பட்டி ருக்கின்றார். இங்ஙனமாக நாவலர் பெருமான் சைவாதீனமைத்து அதன் குரு முதல்வராக இருந்து சைவத்தமிழ்ப் பணி புரியாததேனோ என்பது சிந்திக்க வேண்டியதே.

நாவலர் பெருமான் ஸ்தாபித்த நாவலர் வித்தியாலயத்தில் அன்னாரின் குருபூசைத் தினத்தன்று **(1963)** நாவலர் சைவச்சாதனை மகாநாடு ஒன்று நடைபெற்றது. அன்றைய கருத்தரங்கில் நான் கருத்துத் தெரிவித்தபோது ஈழத்திருநாட்டிற்குச் சைவச் சேவை புரிவதற்குச் சைவாதீனங்கள் அவசியம் தேவையென்று எடுத்துக் கூறியிருந்தேன். அன்று எனது கருத்துக்களுக்குப் பத்திரிகைகள் மதிப்பளித்துப் பிரசுரித்திருந்தன. சைவஸ்தாபனங்களும் பாராட்டியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனமாக சைவாதீனங்கள் பற்றிக் கருத்துக்கள் பரவிக் கொண்டிருக்கக் கதைகாலாச்சேபத்தைப் பக்கவாத்திய சகிதம் சங்கீத கதாப்பிரசங்கமாகப் பரப்பிக் கொண்டிருந்த மணிபாகவதர் ஐயா அவர்கள் கருத்து இவ்விடயத்தில் ஒன்று பட்டிருந்தது. அவர்கள் தமிழ்நாட்டு ஆதீனங்களுடன் கதாப்பிரசங்கமூலம் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். தமிழ்நாடு சென்றபோது ஆதீனத்தில் துறவுநிலை எடுத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரானாகப் பட்டங்கட்டி நல்லை ஆதீனத்தை உருவாக்கி இலங்கையில் முதல் ஆதீனத்தை ஆக்கிய பெருமையைத் தனதாக்கிக் கொண்டார்கள். பின்னர் சைவசேவையில் முன்னின்று பரமாச் சாரியாராகி நல்லைக்குருமணியுமாகினார். இன்று நல்லை ஆதீனம் உலகெங்கணும் தெரிந்த ஒரு ஆதீனமாக மிளிர்கின்றது. இவ்வாதீனம் 1966 இன் பின்னரே ஆக்கப்பட்டுள்ளது. முதலாம்குருமுதல்வர் சமாதிப் பேறடைய இரண்டாம் குருமுதல்வர் பரமாச்சாரியாராக பட்டம் கட்டி இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று மதிப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்.

1972ம் ஆண்டு காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன முதல்வர் ஞானபோதனைக்காக இலங்கைக்கு வருகைதந்தார்கள். அவர்களை அழைத்தவர்கள் கொழும்புவாழ் சைவத்தமிழ் அன்பர்கள். சிவஞான போதம் முதலாம் சைவசித்தாந்த நூல்களில் போதனை நடத்தப் பட்டது. குருமுதல்வரின் சிந்தனையில் சைவாதீனக்கிளை ஒன்று ஸ்தாபிக்கக் கருத்துத் தோன்றியது. அக்கருத்தை இலங்கை மாணவர் மத்தியில் வெளியிட்டார்கள். அதில் காரைநகர் அருளம்பலனார் நியமிக்கப்பட்டார். அதற்குரிய கிரியைகள் செய்து தீட்சாநாமமாக ஞானப்பிரகாசதம்பிரான் சுவாமிகள் என்றும் அருளம் பலனாருக்குச் சூட்டப்பட்டது. இக்கருமங்களில் முன்னின்று உதவிய வர்களில் வைத்தியகலாநிதி முருகவேள் பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

இலங்கையில் மெய்கண்டார் ஆதீனம் நிறுவி குரு முதல்வராக் காரைநகர் அருளம்பலனார் நியமிக்கப்பட்டதும் காரை நகரில் வரவேற்பு விழா நடந்தது. அவ்விழாவுக்கு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பிரதிநிதியாக நானும் கலந்து சிறப்பித்தேன். அங்குவைத்தே என்னை மெய்கண்டார் ஆதீன அமைப்பாளராக ஆக்கிக் கொண்டார்.

ஆதீனப் பணிகளைக் கீரிமலையைத் தளமாகக்கொண்டு ஆரம்பித்தோம். ஆதீனக் குருமுதல்வர் திருக்கேதீஸ்வரம் மடத்திலிருந்து என்னை நெறிப்படுத்தினார். ஆதீனப்பணிபுரிய சைவப் புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டோம். இலங்கையில் நடமாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதீனமாகத் திகழ்ந்தது மெய்கண்டார் ஆதீனம். இதனைத் தெரியாது யாருமிருக்கமுடியாது. யாழ்ப்பாணத்து மூலைமுடுக்கெல்லாம் சென்று மக்களோடு மக்களாக நின்று நாம் சேவைபுரிந்தோம். ஆதீன முதல்வருக்கு வாகன வசதியே தேவைப்படாது. அவர் நடை பவனியாக ஊர்தோறும் சென்று ஆலயங்களிலும் சபைகளிலும் புகுந்து பணிபுரிந்திருக்கின்றார்கள். குழந்தைகளோடு அளவளாவிக் கருத்துக்கள் வழங்கியுள்ளார்கள். சிரமதானப் பணிகளை நடத்தி யிருக்கிறார்கள். கொழும்பில்கூடப் பெரிய சமயவிழா எடுத்துள்ளது மெய் கண்டார் ஆதீனம் என்றால் அதன் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா. நல்லையாதீனம், மெய்கண்டார் ஆதீனம் என்றும் இரண்டினோடு மூன்றாவது ஆதீனமொன்று இலங்கையில் தோன்றிச் சமரசச் சைவச்சேவையைப் புரியத் தொடங்கியுள்ளதை நாம் அறிதல் வேண்டும். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கந்தர் மடம் வேதாந்த மடத்தில் கைலைச்சர்வோதய ஆதீனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு கோண்டாவிலைத் தலைமைப்பீடமாக்க கொண்டு இயங்குகிறது. இதன் குருமுதல்வர் மெய்கண்டார் ஆதீன இரண்டாம் குருமுதல்வரின் மாணவராவர். இலங்கையில் ஒரேயொரு ஆதீனந்தான் உண்டு என்று நினைப்போர் கூறுவோர் இதனை அறிதல் நன்று.

இவற்றைவிட மாவிட்டபுரம் கந்தசாமி தேவஸ் தானம், கீரிமலை நகுலேஸ்வரம் என்பனவும் சைவச்சேவைகளை ஆதீனங்கள் என்ற நிலையிலிருந்து புரிவதையும் அறிதல் வேண்டும். கரணவாய்ச் சைவக்குருக்கள் மாரும் இந்தியாவிலும் இலங்கையிலும் மடங்களை அமைத்து மடாதிபதிகளாக இருந்து ஆதீனங்கள் என்று ஒழுகிவருவதும் அறிதற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆதீன குருமுதல்வரின் நற்சிந்தனை.

திருக்கைலாய பரம்பரைச் சைவ ஆதீனமாக இலங்கையில் இருபத்தைந்து ஆண்டுகளாக மெய்கண்டார் ஆதீனம் சேவை செய்து வெள்ளி விழாவையும் கண்டுள்ளது.

இவ்வாதீனம் சிவஞானபோதம் அருளிய சந்தான குரவராகிய மெய்கண்டதேவரின் திருப்பெயரைத் தாங்கி சைவநெறியையும் செந்தமிழையும் மறைஞான நெறிப்படி வளர்த்து வருகிறது.

சைவ சமயத்திற்கு சமயகுரவர் நால்வர். சந்தான குரவர் நால்வர். சமயக்குரவரில் தலைமையானவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். சந்தான குரவரில் தலைமையானவர் மெய்கண்டதேவ நாயனார்.

சமயகுரவர் பத்தி நெறியையும் சந்தான குரவர் புத்தி நெறியையும் அடிப்படையாகக் கொண்டவர்கள்.

பத்தி நெறியை அன்புநெறி எனவும் புத்தி நெறியை அறிவுநெறி எனவும் கொள்ளலாம். ஆனால் ஒன்றில் ஒன்று அத்துவிதமானவை. அத்துவிதம் இருமையில் ஒருமை.

அறிவை ஞானம் என்பர். அறிவுநெறி ஞானநெறி எனவும் பெயர் பெறும்.

சைவ சமய தீட்சை இருவகை. ஒன்று கிரியாவதி. மற்றது ஞானவதி. கிரியாவதி கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. ஞானவதி அறிவை அடிப்படையாகக் கொண்டது. ஞானவதி தீட்சைக்குரிய எண் மலர்களாவன; 1.உயிர்க்கொலை செய்யாமை, உ.அருள் இரக்கம், 3.பொறி அடக்கல், 4. பொறை, 5. தவம், 6. வாய்மை, 7. அன்பு, 8. அறிவு. இது அந்தரியாகம் – மனப் பூசையாகும்.

மனதினால் கோயில் எடுத்தவர்கள் பூசலார். வாயிலார் நாயனார்கள் "உள்ளம் பெருங்கோயில் ; ஊன் உடம்பு ஆலயம் ; வள்ளல் பிரானுக்கு வாய் கோபுரவாசல் ; தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்" என்பது திருமூலர் திருமந்திர மன்றோ.

கிரியாவதி புறப்பூசை ; ஞானவதி அகப்பூசை. அகப்பூசை நெறியே சந்தானகுரவர் நெறி. புறப்பூசை நெறி சமயக்குரவர் நெறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தானம் தொடர்ச்சி. குரு ஒருவரிடம் இருந்து சீடனுக்கு உபதேசம் பரம்பரையாகத் தொடர்வது. குரு – தந்தை, சீடன் – மகன். சந்தானகுரு பரம்பரை முதல் நூல் சிவஞான போதம். அருளியவர் திருக்கைலாய ஸ்ரீகண்ட சிவன். இதனால் திருக்கைலாய ஞான பரம்பரை மெய்கண்ட தேவர் பரம்பரை.

கல்லால் மரநிழலில் சின்முத்திரை வாயிலாக நால்வர்க்கும் அருளப் பெற்றது மறைஞானம். மறைஞானம் – மறைவான, இரகசியமான ஞானம். வேத ஞானமுமாம். மறை ஞானத்தைப் பெறக் கல்வியறிவு, தருக்க சாத்திரஅறிவு, இலக்கண இலக்கிய அறிவு அவசியமாகும். ஆனால் மெய்கண்ட தேவர் இயல்பாகவே இவற்றை கல்லாமல் – ஓதாமல் உணர்ந்த மறைஞானி. அவரின் குலகுருவாக இருந்து பின் சீடரான அருள்நந்தி சிவாசாரியார் ஓதி உணர்ந்த மறைஞானி.

ஓதாமல் உணர்ந்தவர்க்கு நூல் தேவையில்லை. ஓதி உணர்வார்க்கெனத் தமிழில் பதினான்கு சாத்திரங்கள் உள. அவற்றிலே தலையானது சிவஞான போதம். மெய்கண்டார் இரண்டு உரைகளைச் சிவஞான போதத்திற்குத் தந்துள்ளார். அவற்றிற்குச் சிவஞான முனிவர் சிற்றுரை, பேருரை இரண்டு தந்துள்ளார். சிவஞான சித்தியார்க்கு அறுவர் உரையைவிட திருவிளங்க தேசிகர் உரையும் உண்டு. சித்தியார் எளிமையும் இனிமையும் உடையது.

இவ்வாறு சைவ சித்தாந்த மறைஞான நூல்கள் பெருகி இருந்தும் இலங்கையிலே இதுபற்றி விளக்கம் அளிக்கக் காலத்திற்குக் காலம் தமிழகமே உதவியது. திருஞான சம்பந்தர் ஆதீனத்திலே முறையாக உபதேசம் செய்யும் பேறு பெற்ற நாம் மெய்கண்டார் ஆதீனத்திலும் உபதேசம் செய்யலானோம். மெய்கண்டார் ஆதீனத்திற்கு ஒரு குருமுதல்வர் தேவை என நாம் நிறுவிய மெய்கண்ட தேவர் சைவ சித்தாந்த உயர் நிறுவனத்திற்கு வேண்டுகோள் ஒன்றினைச் சைவப் பெரியாரும் சற்குணசீலருமாகிய மகாவித்துவான், ஞானசிரோமணி, சைவப் புலவர்மணி வ. செல்லையா அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் எவரும் முன்வரா நிலையில் எம்மையே முதல்வராகும் வண்ணம் பலரும் வற்புறுத்தினர்.

யாழ் நகரிலிருந்து சைவ சித்தாந்த மறைஞானப் பணிகளைச் சிறப்பாகச் செய்த பொழுது இடப்பெயர்வு ஏற்பட்டது. வவுனியா சிவமயமாக உள்ளது. சிவநெறிச் செல்வர்கள் நாளும் நல்லா தரவு தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**காஞ்சி குருமகா சந்நிதானம்**
**சீலத்திரு**
**ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

வவுனியாவிலும் யாழ்நகரிலும் மெய்கண்டார் ஆதீனத்தை மீளவும் தாபித்தவர் சைவப்புலவர்மணி அவர்களே. அவர்களின் சேவை முதன்முதல் இலங்கையில் திருக்கைலாய பரம்பரை ஆதீனத்தைத் தாபித்த காஞ்சி சீலத்திரு. ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகளின் சேவைக்கு இணையானது.

இந் நூலாசிரியரையும், நூலைப் பிரசுரிக்கும் புரவலரையும் சைவத்தமிழ் அன்பர்கள் என்றும் வாழ்த்தும் வண்ணம் தில்லை அம்பலவர் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவ ஆதீனங்களின் பங்களிப்பு

தமிழக வரலாறு சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலம், இக்காலம் என ஏழு பிரிவாகப் பிரிக்கப்படும்.

சைவசமயம் எழுச்சிகொண்ட காலம் நாயன்மார் காலமாகிய பல்லவர்காலமாகும். சோழர்காலம் சைவசமயத்தின் பொற்காலம். நாயன்மார்காலத்திலேயே பற்பல மடங்கள் விளங்கின. நாயன்மார் பெயரிலும் பலமடங்கள் தோன்றின. சோழர்காலத்தின் பின்னர்வந்த நாயக்கர்காலம் இருண்டகாலம் என்பர். இக்காலம் சைவசமயிகள் அல்லாதவர் ஆட்சிக்காலம். நாடு நல்லாட்சி அற்ற காலம். அத்தகைய இருள்சூழ்ந்த காலத்திலேதான் சைவ ஆதீனங்கள் தோன்றிச் சமயத்தையும் மொழியையும் பண்பாட்டையும் வளர்த்தன.

மெய்கண்டார் காலம் (1235) பதின் மூன்றாம் நூற்றாண்டு. மெய்கண்டார் அருள்நந்தி சிவம் ஒரே காலத்தவர் கள். மெய்கண்டாரின் சிவஞான போதமும் அருள்நந்தி சிவனாரின் சிவஞானசித்தியாரும் மிகச் சிறந்த மெய்ஞ்ஞான – மறைஞான நூல்கள். பதினான்காம் நூற்றாண்டில் மறைஞான சம்பந்தரும் சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த அட்டகம் அருளிய உமாபதிசிவாசாரியாரும் வாழ்ந்து சைவ சமயத்தை வளர்த்தனர். உமாபதிசிவாசாரியாரின் நேர்சீடர் ஈசனாசிவன் திருகோணமலையில் வாழ்ந்தமைக்கு அகத்தியர் ஸ்தான வரலாறு சான்றாகும்.

எனவே மெய்கண்டார் சந்தான பரம்பரைத் தொடர்பு க்கு மேலும் சான்றாக அவர் சந்ததியினர் இலங்கையிலே வாழ்ந்துமுள்ளனர்.

உமாபதிசிவனாரின் சீடர் அருள் நமச்சிவாயர் காலம் முதல் மெய்கண்டார் சந்தான சைவ ஆதீனங்கள் நிலைபெற லாயின. இது பதினைந்தாம் நூற்றாண்டாகும். சைவசமயத்தவர் அல்லாதவர் ஆட்சிக்காலத்திலே சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் பாதுகாத்த பெருஞ்சிறப்புக்குரியவை சைவ ஆதீனங்களேயாகும்.

பதினெண்பத்ததிகளை அடிப்படையாகக் கொண்ட சிவாசாரிய பரம்பரை கன்ம சித்தாந்த குரவர் பரம்பரையாகும். ஆனால் மெய்கண்டார் பரம்பரை ஞான சித்தாந்தகுரவர் பரம்பரையாகும். இப்பரம்பரை முதலாசிரியர் திருக்கைலாய நீலகண்ட பரமசிவனார். அதனால் இப்பரம்பரை திருக்கைலாயஞான பரம்பரை எனப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரம்பரையிற் வந்தோரிற் பலர் ஞானப்பிரகாசர் என்னும் ஞானப்பெயரை பெற்று விளங்கினர்.

தருமபுர ஆதீன முதற்குரவராகிய மறைஞான சம்பந்தரின் குரு கமலை ஞானப்பிரகாசராவர். அதேபோல காஞ்சி தொண்டை மண்டல ஆதீன முதற்குரவர் காஞ்சி ஞானப்பிரகாசராவர். இம் மண்டல ஞானகுரவர்கள் ஞானப்பிரகாச பரமசாரிய சுவாமிகள் என்னும் பெயரை ஒருவர்பின் ஒருவர் பெற்று விளங்குகின்றனர்.

அதேபோலவே இலங்கை மெய்கண்டார் ஆதீனக் குரவர்களும் ஞானப்பிரகாசர் என்னும் பெயரைப் பெறுகின்றனர்.

**இருந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்**
**கிடந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்**
**அந்தகர் வந்து தொடர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்**
**பின்னை என் சொல்வதே**

என்பது ஒரு பழம்பாடல்.

காஞ்சிபுரத்திலே தொண்டைமண்டல ஆதீனத்தைத் தாபித்த காஞ்சி ஞானப்பிரகாசர் மெய்கண்டார் சந்தான பரம்பரையில் எட்டாவது இடத்திலும் திருவாவடுதுறை ஆதீன முதற்குரு ஏழாவது இடத்திலும் உரியவர்கள் என சென்னை பிரதிபா பிரசுரம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கைலாய சந்தான ஆசாரிய பரம்பரை.

ஸ்ரீகண்டபரமசிவன் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் நால்வருக்குச் சிவஞான உபதேசம் நல்கினார். முதலில் திருநந்தி தேவருக்கும் உபதேசித்தார். நால்வரில் சனற்குமாரரிடம் சத்திய ஞானதரிசினிகள் உபதேசம் பெற்றார். சத்திய ஞானதரிசினியிடம் பரஞ்சோதிமாமுனிவர் உபதேசம் பெறலானார்.

நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசினிகள் பரஞ்சோதி முனிவர் நால்வரும் அகச் சந்தான குரவராவர்.

பரஞ்சோதி மாமுனிவர் மெய்கண்டதேவர்க்கு உபதேசித்தார். மெய்கண்டார் அருள்நந்தித்தேவர்க்கும் அருள்நந்தி தேவர் மறைஞானசம்பந்த நாயனார்க்கும் உபதேசித்தார். மறைஞானசம்பந்தர் உமாபதிச்சிவாசாரியாருக்கு உபதேசித்தார்.

மெய்கண்டார், அருள்நந்திதேவர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் நால்வரும் புறச்சந்தான குரவராவர்.

உமாபதி சிவாசாரியாரிடம் சிவஞான உபதேசம் பெற்ற பலருள் முதன்மையானவர் அருள் நமச்சிவாயர். இவரை கொன்றவன் குடி மச்சுச்செட்டியார் எனவும் கூறுவர்.

அருள் நமச்சிவாயரின் சீடர்களுள் இருவர் மிகச் சிறப்பாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர். ஒருவர் சித்தர் சிவப்பிரகாசர். மற்றவர் காழிக்கங்கை மெய்கண்டார்.

சித்தர் சிவப்பிரகாசரின் முதன்மையான மாணவரே திருவாவடுதுறை ஆதீன முதற்குரவராகிய நமச்சிவாய குருமூர்த்திகள். நாவலர் பெருமானுக்கு நாவலர்ப்பட்டம் அளித்த ஆதீனம் திருவாவடு துறை ஆதீனமே. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, கோப்பாய்ச் சபாபதிநாவலர், தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் முதலியோர் திருவாவடுதுறை ஆதீனத் தொடர்புடைய புலமையாளர்கள். புலமையோடு ஞான குரு சுவாமியாக விளங்கியவர் சிவஞானமாபாடியம் அருளிய சிவஞான முனிவராவார். சிவஞானபோத வசனாலங்காரதீபம் செய்தவர் ஏழாலை குப்பிளான் செந்தில்நாதைய சுவாமிகள். இவர் நல்லூர் திருஞான சம்பந்த ஆதீன முதற்குருமூர்த்திகளின் முன்னோருமாவார்.

காழிக்கங்கை மெய்கண்டாரின் சீடர் காழிப் பழுதை கட்டிச் சிற்றம்பல நாடிகள். அவர்சீடர் பழுதைக்கட்டிச் சம்பந்தர். அவர்சீடர் சிவபுரம் ஞானப்பிரகாசர். அவர்சீடர் சிவபுரம் தத்துவப்பிரகாசர்.

அவர்சீடர் திருவாரூர் ஞானப் பிரகாசர். அவர்சீடர் கமலை ஞானப்பிரகாசர். அவர்சீடரே தருமபுர ஆதீன முதற்குரவராகிய குரு ஞானசம்பந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகாழிக் கங்கை மெய்கண்டார் சீடர் காழிச் சிற்றம்பல நாடிகள். இவரை சித்தர்வனம் சிற்றம்பல நாடிகள் எனவும் கூறுவர். இவர்க்கு மாணவராக அறுபத்துமூவர் விளங்கினர். இவர் காலம் கி.பி. 1365ஆம் ஆண்டு. அதாவது பதினான்காம் நூற்றாண்டு. இவரின் சீடர்களுள் ஒருவரே கச்சி ஞானப்பிரகாசம். கச்சி காஞ்சி எனவும் கூறுவர்.

காஞ்சி ஞானப்பிரகாச சுவாமிகளே காஞ்சி தொண்டை மண்டல மெய்கண்டார் ஆதீன முதற்குரவராவார். இதுவரை உ௩௧ குரவர்களை காஞ்சி தொண்டைமண்டலம் கண்டுள்ளது. ஆனால் திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்கள் 30 குரவர்களுக்கு உட்படவே கண்டுள்ளன.

இவ்வேறுபாடு ஏன் என்பது உணரத்தக்கது.

தமிழ்நாட்டில் உள்ள ஆதீனங்களில் சிறந்தவை முறையே திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள்களாகும். பிரசித்தி பெற்றவைகளாக குன்றக்குடி, சூரியனார்கோயில், மதுரை ஆதீனங்கள் விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தருமபுர ஆதீனத்தின் பங்களிப்பு

தமிழகத்திலுள்ள சைவ ஆதீனங்களிலே திருவாவடு துறை, தருமபுர ஆதீனங்கள் மிக முக்கியமானவை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆறுமுக நாவலர் பெருமானின் மாபெருஞ் சேவையைப் பாராட்டிப் பட்டமளித்த பெருமைக்குரியது திருவாவடு துறை ஆதீனம். இருபதாம் நூற்றாண்டிலே இலங்கைவாழ் சைவர்களுக்கு உதவுவதிலே தருமபுர ஆதீனம் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளது.

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் யாழ்ப்பாணத்திலே எடுத்த சேக்கிழார் விழாவிலே தருமபுர ஆதீனத் தம்பிரான் சுவாமிகள் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். பின்னாளில் அவர்களே அவ்வாதீன குருமகாசந்நிதானமாக விளங்கினார்கள். குன்றக்குடி அடிகளார் பலதடவை இலங்கைக்கு வருகை தந்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. குன்றக்குடி அடிகளார் குன்றக்குடி ஆதீன குருமுதல்வராக வர முன் தருமபுர ஆதீனத் தம்பிரானாகவே விளங்கினார்கள்.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆரம்பிக்கப்படவும் அதனை நிலைபெறவும் உதவியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆதீனக் குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளாவர். இவர்கள் தருமபுர ஆதீனத்தின் 25வது முதல்வராவர்.

இவர்களை குருமுதல்வராகக் கொண்டே தருமபுர ஆதீனப் பல்கலைக் கழகத் கல்லூரித் தலைவராக விளங்கியவர் முதுபெரும் புலவர் முத்து சு. மாணிக்கவாசக முதலியார். அவர்களைத் தொண்டை மண்டல ஆதீனத்தின் 229வது குருமுதல்வராக்கியவரும் மேற்கூறிய தருமபுர ஆதீன முதல்வரே.

தொண்டை மண்டல ஆதீன முதல்வரால் தாபிக்கப் பெற்றதே இலங்கை மெய்கண்டார் அதீனம். இவ்வாற்றல் தருமபுர ஆதீனத்தின் சேவையை இலங்கைவாழ் மக்கள் என்றும் போற்றுவர். தருமபுர ஆதீன ஆட்சியிலேயே திருஞான சம்பந்த சுவாமிகளுடன் தொடர்புடைய சீர்காழித் திருத்தலம் பரிபாலனஞ் செய்யப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டை மண்டல ஆதீனத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

காஞ்சிபுரம் பல்லவர் காலத்தில் தமிழ் நாட்டின் தலைநகராக விளங்கிய பெருமைக்குரியது. கந்தபுராணம் அருளிய கச்சியப்பசிவாசாரியார் காஞ்சிக் கந்தக்கோட்ட அருச்சகராவர். இலங்கைவாழ் சைவர்களின் பண்பாட்டு நூலாகத் திகழ்கின்ற கந்தபுராணத்தைத் தந்த பெருமைக்குரிய காஞ்சிபுரத்திலே உள்ளதே தொண்டைமண்டல ஆதீனமாகும். தொண்டைமண்டலத்திற்கும் இலங்கைக்குமுள்ள தொடர்பு சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும்.

பல்வேறு சமய நிறுவனங்களைக் கொண்டுள்ள காஞ்சியிலே தொண்டை மண்டல ஆதீனம் காஞ்சி ஞானப்பிரகாச சுவாமிகளால் நிறுவப்பெற்றது. இவர் துகளறுபோதம் திருச்செந்தூர் அகவல் அருளிய சீகாழிச் சிற்றம்பல நாடிகளின் சீடராவர். மேற்கூறிய இரு நூல்களும் சிறந்த சைவசித்தாந்த நூல்களாகும். இவற்றிற்கு உரைகண்ட சிறப்பு இலங்கைவாழ் சைவர்களுக்கு உரியதாகும்.


துகளறுபோத உரை தந்தவர் திக்கம் செல்லையா எனப்பேர்பெற்ற ஈசானசிவனாவர். திருச்செந்தூர் அகவல் உரைதந்தவர் புங்குடுதீவு வித்துவான் பொன் கனகசபையாவர்.

தொண்டைமண்டல ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் பின் தருமபுர ஆதீனத்திற்கு முன் தாபிக்கப் பெற்றதாகும். ஆரம்ப காலம் பதினைந்தாம் நூற்றாண்டு. இதுவரை 231 குருமுதல்வர்களைத் தொண்டைமண்டல ஆதீனம் பெற்றுள்ளது. ஆனால் திருவாவடுதுறை, தருமபுர ஆதீனம் **30** குருமுதல்வர்களுக்கு உட்படவே கண்டுள்ளன.

இதனால் அறிவது தொண்டைமண்டல ஆதீன. முதல்வர்களாகப் பதவி வகித்தோர் நெடுங்காலம் ஆட்சி செய்யவில்லை. காரணம் வயதிலே முதியவர்களே பெரும்பாலும் முதல்வர்களானமையால் ஒவ்வொருவரின் ஆட்சிக்காலமும் மிகக்குறுகிய காலமாகும். ஆனால் ஒவ்வொருவரும் பழுத்த அநுபவமுள்ளவர்கள் என்பதற்கு இலங்கையிலே மெய்கண்டார் ஆதீனத்தைத் தாபித்த **229**ஆம் குருமகா சந்நிதானமே சான்றாவர்.

இவர்கள் பன்னெடுங் காலம் தருமபுர ஆதீனப் புலவராக விளங்கிய பின்னர் தொண்டை மண்டல ஆதீனத்திற்கு ஒரு முதல்வர் தேவைப்பட்டமையால் தருமபுர ஆதீன குருமகா சந்நிதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீலத்திரு
ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் நியமனம் பெற்றார். இப்பொழுது **231**ஆவது குருமகா சந்நிதானம் அருளாட்சி செய்கின்றார்கள். !

தொண்டை மண்டல ஆதீனத்தின் மேற்பார்வையில் திருத்தணிகை திருமுருகன் ஆலயம் நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனந்த போதினி பதிப்பித்த தேவார அடங்கன்முறை மூல ஏடுகள் தொண்டை மண்டல ஆதீனத்திற்குரியவையாகும். இவ்வாற்றால் பழைய நூல்களைப் பேணிப்பாதுகாக்கும் அருங்கலை நிலையமாகவும் இவ்வாதீனம் விளங்குகின்றது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம் 229 ஆவது குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

அடியார்க்கு அடியன் முத்து. சு. மாணிக்கவாசகன் என்னும் பெயரிலே தருமபுர ஆதீனப்புலவராகவும், ஆதீனப்பல்கலைக் கழகத் தலைவராகவும் சித்தாந்த சிரோமணி, சித்தாந்தரத்நாகரம், மதுரகவி, முதுபெரும்புலவர் வித்துவானே பின்னாளில் தொண்டை மண்டல ஆதீனக் குருமகா சந்நிதானமாக விளங்கினார்.

இவர்கள் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் அவர்களிடம் சிதம்பரம் மீனாட்சியம்மை கலாசாலையில் கற்றவர். இலக்கிய இலக்கண அறிவிலும் ஆராய்ச்சியிலும் வல்லவர். சைவசமயசாத்திர தோத்திரங்களிலே மிகுந்த பாண்டித்தியம் உள்ளவர். குருலிங்க சங்க வழிபாட்டிலே தலைசிறந்தவர். சிறந்த நற்குணங்கள் யாவும் நிறைந்தவர்.

தருமபுர ஆதீனம் இருபதாம் நூற்றாண்டிலே தலைசிறந்த சேவைகள் பலசெய்வதற்கு உறுதுணையாக விளங்கியவர்.

இவர்களின் பல்வேறு சிறப்புக்களையும் உணர்ந்த தருமபுர ஆதீன குருமகா சந்நிதானம் தொண்டைமண்டல ஆதீன குருமுதல்வராக்கிச் சிறப்பளித்தனர். குருமுதல்வராக முன்னரும் பின்னரும் இலங்கைக்குப் பலதடவை வருகைதந்து சைவ சமயத்தையும் தமிழ்மொழியையும் வளம் பெறச் செய்துள்ளார்.

1972ஆம் ஆண்டிலே இலங்கையில் மெய்கண்டார் ஆதீனத்தைக் கொழும்பிலே தாபித்தார்கள். ஈழத்துத் திருநெறிய தமிழ் மன்றத்தையும் தாபித்தார்கள். அகில இலங்கை எங்கும் சென்று அருள் உரைகள் வழங்கினார்கள். சுவாமிகளிடம் நிருவாண தீட்சைகூடப் பலர் பெற்றார்கள். அவர்களுள் ஒருவர் புங்குடுதீவு சைவசித்தாந்த பேராசான் சி. கணபதிப்பிள்ளை வைத்தியர் அவர்கள். அவர்களின் சமாதி நயினாதீவு செல்லும் பெருந்தெருவிலே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சித்தாந்த சாத்திரங்களுக்கு திருமுறைகளுக்கும் சிறந்த உரைகண்ட பெருமை சுவாமிகளுக்கு உரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாயநம எனும் பஞ்சாட்சரத்திலுள்ள திருவைந்தெழுத்துக்கள் முறையே பொருள், அருள், தெருள், மருள், இருள் என விளங்கித் தச காரியத்தினால் சீவன் சிவமாகும் ஞானத்தினை எளிய இனிய முறையிலே அளித்த ஞானகுருமூர்த்தி இவர்களாவர். இது பற்றிய விளக்கம் தருமபுர ஆதீன மாத வெளியீடான ஞானசம்பந்தத்திலே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம், நான்காம் திருமுறைகளுட்கு உரை விளக்கம் தந்துள்ளார்கள். உண்மை விளக்க உரை மிகமிக வரவேற்கத் தக்கதாகும். சிவஞான சித்தியார்க்கு வினாவிடை தந்துள்ளார்கள்.

மிகச்சிறந்த கவிதையாற்றல் உள்ள சுவாமிகள் சிவஞான போதக் கருத்தினை உள்வாங்கித் தருமபுர ஆதீனக் குருமூர்த்திகள் மீது தோத்திரப்பா செய்துள்ளார்கள்.

இவர்கள் தந்தையார் முத்து.சுந்தர முதலியார் பெரும்புலவர், மகாவித்துவான். கலைக்களஞ்சியத்திலும் தமிழ்ப்புலவர் சரித்திரத்திலும் இடம் பெற்றவர். சிறந்த சிவதொண்டருமாவார்.

சிவஞானத்தை விலைபேசாது எவர்க்கும் அருளிய குருமூர்த்திகளின் அருட்பார்வையும், அருள்மொழியும் இலங்கைவாழ் மக்களிற் பலரைச் சீவன் முத்தராக வாழ வைத்துள்ளன. அவர்கள் அளித்த சிவஞானத்தை விலைபேசாது எவர்க்கும் இலவசமாக வழங்கும் நிறுவனமாக விளங்குவதே இலங்கை மெய்கண்டார் ஆதீனமாகும்.

இலங்கையில் மெய்கண்டார் ஆதீனத்தின் நிறுவுநரான காஞ்சிகுருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் **1977** ஆடிப்பூராடத்திரு நாளன்று பரிபூரணமடைந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற்குரு மகா சந்நிதானம்
## சீலத்திரு ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்.

இலங்கையில் மெய்கண்டார் ஆதீன முதலாவது குருமகா சந்நிதானமாக 1972 சித்திரைச் சித்திரையிலே பதவியேற்றவர் சீலத்திரு ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளாவர். 1990 சித்திரைப் பரணித்திருநாளன்று பரிபூரணமடைந்தார். இவரின் சமாதி கீரிமலையிலுள்ளது, 18 ஆண்டுகளாகக் குருபீடாதிபதியாக விளங்கிய சுவாமிகளின் இயற்பெயர் அருளம்பலம். பிறந்து வாழந்த இடம் யாழ்ப்பாணம் காரைநகர்.

இளமை தொடங்கிப் பொதுச்சேவையில் ஈடுபட்டமையால் அனைவராலும் தொண்டர் என அன்பாக அழைக்கப்படலானார். ஞானநாட்டம் மிக்கவராக விளங்கிய சுவாமிகள் வேதாந்த அறிவும் சைவசித்தாந்த அறிவும் உலகியல் அரசியல் அறிவும் நிரம்பியவர். தர்க்கித்து உண்மையை நிறுவுவதிலும் அதன் பொருட்டுத் தம்மையே உண்மைக்கு அர்ப்பணிப்பவராகவும் விளங்கினார்.

ஞானவிசாரணையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட சுவாமிகள் பிறர்க்கும் அதனை வழங்குவதிலே நிகரற்றவராகத் துலங்கினார்.

வழிபாடு இருவகைப்படும். ஒன்ற புறவழிபாடு, மற்றது அகவழிபாடு. அகவழிபாட்டிற்கு ஞானசாஸ்திர ஈடுபாடும் குருவருளும் தேவை. புறவழிபாட்டிற்கு ஊர்தோறும் பற்பல திருக்கோவில்கள் ஏற்பட்டுள்ளன. புறவழிபாடு பக்திமார்க்கமாகும். அதாவது கிரியாவதி. அகவழிபாடு ஞானமார்க்கமாகும். இது ஞானவதி எனப்படும்.

ஞானவதி அந்தரியாகம் எனப்படும் அந்தரியாக பூசைக்கு அன்பு, அறிவு, தவம், கொல்லாமை, பொய்யாமை முதலிய எண்வகைப் பூக்கள் அவசியமாகும். அகச்சுத்தமே ஞானவழிபாட்டுக்கு அத்திபாரம். ஞானவதியிலும் கிரியாவதியிலும் நல்லறிவு பெற்ற சுவாமிகள் ஆலய விழாக்களிலே கிரியாவதியிலே ஏற்படும் தவறுகளை நேருக்கு நேரே எடுத்துரைப்பதிலும் எழுத்திலே எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். இதனை அவர்கள் வெளியிட்ட மெய்கண்டார் இதழ்களிலே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்கண்டார் ஆதீனப் பணிகள்.

மெய்கண்டார் ஆதீனம் "உள்ளம் பெரும் கோயில், ஊன்உடம்பு ஆலயம், வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" என்னும் திருமூலதேவரின் திருமந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு உள்ளத்திலே இறைவனைக் கண்டு காட்டும் மெய்கண்டாரின் சிவஞானபோதம் சேவையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கோயில்கட்டி கும்பாபிடேகம் செய்த பல்லவப் பேரரசன் இராஜசிங்கனிலும் உள்ளத்தால் கோயில் கட்டிய பூசலாரின் கோயிலையே சிவ பரம்பொருள் பெரிதும் போற்றியுள்ளார் என்பது பெரியபுராண வரலாறு.

ஒவ்வொரு உள்ளத்திலும் இறைவன் அருட்பெருஞ் சோதியாக விளங்குவதை உபதேச வாயிலாகக் கடந்த 25 ஆண்டுகளாக மெய்கண்டார் ஆதீனம் இலவச சேவையாகச் செய்து வருகின்றது.

அத்துடன் திருக்கோயில் வழிபாட்டினையும் ஆதரித்து அது முறையாக நடைபெறவும் உறுதுணைபுரிந்து வருகின்றது.

கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, இளவாலை, பருத்தித்துறை, திருக்கேதீச்சரம், கரம்பன், காரைநகர், கீரிமலை, வவுனியா எனப் பல்வேறு இடங்களிலும் நடமாடும் ஆதீனமாக அரிய பெரிய சைவசமயக் கருத்துக்களை வழங்கி வருகின்றது. விழாக்கள் பலவற்றை எடுத்துப் பலரையும் வீரிவுரையாற்ற உதவி புரிந்துள்ளது,

இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணத்தையோ, பொருளையோ, புகழையோ ஒரு பொருட்டாக மதியாமையால் பணமும் பொருளும் புகழுமே வாழ்வென நம்பினோரால் இத்தகைய ஆதீனம் இல்லை என்ற பேச்சுக் கூட எழுந்துள்ளது . என்னே உலகம்!

உலக போகத்திற்காக இறைவனை வணங்கலாம், குற்றமில்லை. அதுமாத்திரம் சமய வாழ்வு அல்ல. உலக போகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் சிவஞானபோகத்தைப் பெறலாம் என்பதற்கு வழிகாட்டவே மெய்கண்டார் ஆதீனம் ஏற்பட்டுள்ளது, அதனை நடைமுறையிலே காட்டியுமுள்ளது.

மிகச்சிறந்த சிவாச்சாரியார்களும் சிவத்தொண்டர்களும் மெய்கண்டார் ஆதீனப் பணிகளை வாயாரப் போற்றியுமுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் மெய்கண்டார் ஆதீனம்.

நாட்டின் நிலமைகாரணமாக மக்களின் இடம் பெயர்வு நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு யாரும் விதிவிலக்காக இருக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் கலைப்புலவர் வீதியில் தலைமையகத் தைக் கொண்ட மெய்கண்டார் ஆதீனமும் இடம்பெயர்ந்தது. ஆதீனக்குரு முதல்வர் சீலத்திரு ஞானப்பிரகாசபரமாச்சாரிய சுவாமிகள் இடம் பெயர்ந்து சிலகாலம் கொழும்பில் தங்கியிருந்தார். 1996 நடுப்பகுதியில் வவுனியாவிற்கு வருகைதந்து 101, அம்மன் வீதி, பண்டாரிகுளம் இல்லத்தில் தரித்திருக்கிறார்கள். இங்கு வந்துள்ளமையை எனக்கு அறிவித்தார்கள். அந்த அறிவித்தல் கிடைத்த நாட்தொடக்கம் மெய்கண்டார் ஆதீனத்தை வவுனியாவில் நிலையாக இருக்கச்செய்து சைவத் தமிழ்ச் சேவைபுரிய ஆவனசெய்து வருகிறேன்.

## வரவேற்பு விழா

மெய்கண்டார் ஆதீனக்குரு முதல்வர் ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகளுக்கு 1996 தீபாவளித் திருநாளன்று வவுனியா ஆதி விநாயகர் ஆலய மண்டபத்தில் சிறப்பான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது. அன்று அவ்வாலயத்தில் மெய்கண்ட தேவநாயனார் குருபூசையும் அநுட்டிக்கப்பட்டது. வவுனியா வாழ்மக்கள் ஆதீன முதல்வர் வரவைப் பெரிதும் விரும்பி ஆதரித்தனர். இந்நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்திய ஆதிவிநாயகர் ஆலய பரிபாலன சபையார்களுக்கும் சிறப்பாக திரு. T. தில்லைநாதனுக்கும் திரு. எஸ். விசாகப்பெருமாள் (கிராமசேவை உத்தியோகத்தர்) அவர்களுக்கும் மெய்கண்டார் ஆதீனம் என்றும் கடமைப்பாடு உடையதாகும்.

## வவுனியா இந்து மன்றத்தில் நிகழ்ச்சிகள்.

ஆதீனம் சைவசேவையைப் புரிவதற்கு வவுனியாவை நல்லதொரு நிலைக்களமாகத் தெரிவு செய்தது. முதன்முதல் இந்து மாமன்றத்தில் சைவசித்தாந்த கருத்துக்களை வழங்குவதற்கு ஒழுங்கு செய்தோம். அப்பெரும் பணியை ஆதீனக்குரு முதல்வர் ஏற்றுக்கொண்டார். ஞாயிறு தோறும் இக்கருத்தரங்கு தொடர்ந்தது. பின்னர் அது தற்காலிகமாக ஒத்திபோடப்பட்டுள்ளது.

## நாவலர் குருபூசை

1996 நவம்பர்மாதம் நாவலர் குருபூசை சற்சங்க வியாபகர் திரு. ந. செல்லையா தலைமையில் அநுட்டிக்கப்பட்டது. மெய்கண்டார் ஆதீனக்குரு முதல்வர் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். சைவப்பேரறிஞர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வைபவம் இந்துமாமன்ற அநுசரணையுடன் அம்மன்றத்தில் நடந்தேறியது.

**பவளவிழா**

**10-03-1997** இல் ஆதீனபரிபாலனசபை உபதலைவர் திரு. ந. செல்லையாவின் பவளவிழா குருமண்காட்டு சித்திவிநாயகர் ஆலயத்தில் பூசைவழிபாட்டுடன் சிறப்பாக நடத்தப்பட்டது. தமிழருவி திரு. சிவகுமாரன் **B.A. (Hons)** அவர்கள் விழா நாயகருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

**மெய்கண்டார் ஆதீன முதலாங்குரு முதல்வர் குருபூசை.**

**1997** சித்திரைப் பரணியில் மெய்கண்டார் ஆதீன முதலாங்குரு முதல்வர் சீலத்திரு ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளின் குருபூசை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடாத்தப்பட்டது. பூசை வழிபாட்டுடன் இரண்டாம் குருமுதல்வரின் அருளுரையும் வழங்கப்பட்டது. தமிழ்மணி அகளங்கன் அவர்களும் தமிழருவி சிவகுமாரன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். இவ்வைபவத்திற்கு வேண்டிய உதவிகளைச் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**சைவ ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு.**

வவுனியாவில் கடமையாற்றும் சைவசமயபாட ஆசிரியர்களின் அறிவை விருத்திசெய்து உதவவேண்டுமென்று மெய்கண்டார் ஆதீனம் கருதியது. அதன் பேறாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க ஆதரவையும் வவுனியா கல்விக் கோட்டத்தின் அனுசரணையையும் பெற்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் **13-07-97** இல் முழுநாள் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. மெய்கண்டார் ஆதீன குருமுதல்வரின் அருளுரையுடன் வவுனியா பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. விசாகலிங்கம் வவுனியா கல்விக்கோட்ட அதிகாரி திரு. க. சீனிவாசகம் என்போரின் சிறப்புரைகளுடன் கருத்தரங்கு ஆரம்பமாகியது. கருத்தரங்கின் பொருள்களாக சமயக்கல்வி கற்பித்தல், புராண இதிகாசங்களும் சமயக் கல்வியும், சைவநெறியில் சைவசித்தாந்தம் என்பன எடுக்கப்பட்டன. அவற்றில் முறையே பண்டிதர் திரு. க. சச்சிதானந்தம் **M.PHL** அவர்களும் தமிழ்மணி திரு. ந. தர்மராசா (அகளங்கன்) **B.A.** அவர்களும் தமிழருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. த. சிவகுமாரன் **B.A. (Hons)** அவர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் அனைத்து உதவிகளையும் வழங்கி வழிநடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

**ஆதீன துண்டுப்பிரசுரம்.**

மெய்கண்டார் ஆதீனகுரு முதல்வர் சுகவீன முற்றதால் ஆதீனத்தைக் கொண்டு நடாத்த ஒரு முதல்வர் தேவை என்ற தலையங்கத்தில் **1996** நடுப்பகுதியில் ஒரு துண்டுப்பிரசுரம் விடப்பட்டது. அத்துண்டுப் பிரசுரத்தில் ஆதீனம் வவுனியால் இருந்து செயற்படும் விலாசம்

***முதல்வர், மெய்கண்டார் ஆதீனம்,***
***101, அம்மன் வீதி, பண்டாரிகுளம்,***
***வவுனியா.***

என்று கொடுக்கப்பட்டது. துண்டுப்பிரசுரம் சார்பாக எவரிடத்திலிருந்தும் எவ்வித பதிலும் கிடைத்திலது.

**ஆதீன பரிபாலன சபை**

எனது தலைமையில் (வித்துவான் சைவப்புலவர் மணி வ. செல்லையா) மெய்கண்டார் ஆதீன பரிபாலனசபை குருமுதல்வர் கட்டளைப்படி அமைக்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் குருமுதல்வரின் கட்டளைக்கமையவே நியமிக்கப்பட்டனர். ஆயின் சபை செயற்படத்தக்கதொரு செயலாளரும் பொருளாளரும் கிடைத்திலர். பரிபாலனசபையமைத்தலைப் பின்போட்டுக் குருமுதல்வரின் ஆணைப்படி ஒரு இணைப்பாளரை நியமித்து ஆதீனக்கருமங்களை ஆற்றி வந்தேன். இணைப்பாளருங் சுகயீனங்காரணமாகத் தம்பதவியிலிருந்து நீங்கிக் கொள்ள நானே தனித்து ஆதீனப்பணியை உபதலைவர் திரு. ந. செல்லையாவையும் இணைத்துச் செய்து வருகிறேன்.

**ஆதீனக்குருமுதல்வர் ஒருவர் தேவை.**

தற்போதைய ஆதீனக் குருமுதல்வர் நோய்காரணமாக அவசியம் ஓய்வெடுக்கவேண்டியுள்ளது. அவ்விடத்திற்கு ஆசார அநுட்டான சீலரும் திருமுறை சாஸ்திரப் பயிற்சி நிறைந்தவரும் துறவு பூண்டு சைவசமய வேலையைத் தாமும் செய்வதோடு மற்றோரையும் வழிநடத்திச் செய்விக்க வல்லவராயுள்ளவருமாகிய ஒரு நல்லாசானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நூலாசிரியர்**
**சைவப்புலவர்மணி, மகாவித்துவான்**
**வ. செல்லையா அவர்கள்**

ஆதீனம் விரும்புகிறது. இதில் கலந்துழைக்க மனமும் நாட்டமும் உள்ளவர்கள் முன்வருக. இங்ஙனம் ஒருவரைத்தந்துதவ சைவப்பெருமக்களை வேண்டிக்கொள்கிறோம். ஆதீனம் நிலைத்திருந்து செயற்படத் தகுந்த இடம் வேண்டும்.

வவுனியாவில் ஆதீனத்தை நிலைகொண்டு செயற்பட ஒரு கட்டடமோ, நிலமோ கிடைத்திலது. வவுனியா அரசாங்க அதிபர் அவர்களும், நகரபிதா அவர்களும் எங்கள் சைவசேவைக்கு ஆதரவு தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் சைவநிறுவனங்களும் எங்கள் பணிக்கு முன்னுரிமை நல்கி ஆதீனத்திற்கு ஒரு காரியாலயம் நடத்த ஓர் இடம் முதலில் தந்துதவ வேண்டுகிறோம். பின்னர் ஆதீனத்திற்கு நகரின் மத்தியில் ஓர் நிலமும் கட்டடமும் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்கு நிலைத்திருந்து சைவப்பணிபுரிய அனைத்து சைவமக்களின் உதவியையும் வேண்டிநிற்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்கண்டார் ஆதீனப்பணிகளில் இருபத்தைந்து வருடங்கள்.

"நின்கடன் அடியேனையுந் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் வாக்குக்கமைய என் சைவப்பணியும் இன்று வளரத்தொடங்குகிறது. இறையருளால் என்றுமே தொடரட்டும்.

எனது 17 வயதில் சமயச்சேவையில் கால் ஊன்றினேன். அகில இலங்கை ரீதியாக பத்துக்கு மேற்பட்ட சைவத்தமிழ் ஸ்தாபனங்களில் தலைமை முதல் பல்வேறு பதவிகளையும் வகித்துப் பணியாற்றியிருக்கிறேன். அவற்றுள் சில நான் ஸ்தாபித்துத் தலைமை தாங்கியவை. அவை இன்றும் நிலைத்துப் பணியாற்றுகின்றன. அதனை நினைக்க மனம் பூரிக்கின்றேன். என் சமயப்பணி கடல்கடந்தும் நடந்துள்ளமை குறிப்பிடவேண்டியது.

மெய்கண்டார் ஆதீனம் இந்தவருடம் வெள்ளிவிழாக் கொண்டாடுகிறது பாராட்ட வேண்டியது. மெய்கண்டார் ஆதீனம் தன்சேவையில் கால் நூற்றாண்டைத் தாண்டியுள்ளது. மனிதனின் ஆயுளுக்கு உத்தரவாதமில்லை. இத்தனையாண்டுக்கு நான் வாழ்வேன் என்று யாரும் உறுதியளிக்க முடியாது. அங்ஙனம் ஸ்தாபனங்களின் ஆயுளுக்கும் உத்தரவாதமில்லை. ஸ்தாபனம் ஸ்தாபித்த தினமே ஸ்தம்பித்துவிடலாம். அப்படியிருக்க மெய்கண்டார் ஆதீனம் 25 ஆண்டுகள் நிலைத்து நின்று சைவப்பணிகளைப் புரிந்திருக்கிறதென்றால் பாராட்டவேண்டும்.

நான் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை ஸ்தாபித்து 13 வருடங்கள் அதன் தலைவராக இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட சைவப்புலவர்களை உருவாக்கினேன். அகில இலங்கையிலும் சைவசேவைகளை விஸ்தரித்து நடத்தினேன். மட்டக்களப்பில் அதற்கோர் கிளைச் சங்கமும் அமைத்து செயற்பட வைத்து தலைமைப்பதவியில் இருந்து நானாகவே ஓய்வு பெற்றேன். நான் விரும்பினால் இன்றுவரை தலைவராக இருந்திருக்கலாம். மற்றவர்களும் தலைமைத்துவம் பெற்று நடாத்தவேண்டுமென்ற நன்நோக்கங் கொண்டே அங்ஙனம் செய்தேன். நான் வளர்த்தெடுத்த சங்கம் இன்றும் புலவர்களை உருவாக்கிச் சேவைபுரிந்து கொண்டு வருவதைக் கண்டும் மனம் பூரிக்கின்றேன்.

இங்ஙனமாகச் சைவத்தமிழ்ச் சங்கங்களில் திறம்படச் சேவையாற்றியமையைக் கண்ட மெய்கண்டார் ஆதீன முதலாங்குரு முதல்வர் என்னை தம்மாதீனத்திற்கு அமைப்பாளர் பொறுப்பை ஏற்றுச் சேவை புரியவருமாறு அழைப்பு விடுத்தார்கள். அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று ஆதீனப் பணிகளைப் புரியலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்கண்டார் ஆதீனம் ஒரு நடமாடும் ஆதீனமாகச் செயற்பட்டு வந்தது. கால்நடையாக ஊர் ஊராகச் சென்று பணி புரிந்தோம். பணம் எதுவும் பெறாது இலவச சேவை நடத்தினோம். அதனால் நமக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. தற்போதைய குருமுதல்வரும் எங்களுடன் சேர்ந்து சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. முதலாங்குரு முதல்வருக்கும் பிரசங்கம் கைவந்த கலை. ஆலயங்களில் புராண படலங்களும் செய்யவல்லவர். சைவசித்தாந்த சாஸ்திர அறிவும் நிரம்பப் பெற்றதால் மாணவர்களுக்கு அத்துறையில் வகுப்பும் நடத்தினார்கள். பல்துறை விற்பன்னராக ஆதீன முதல்வரோடு சேர்ந்து சைவசேவை புரிவது எமக்கு இலகுவாக இருந்தது.

இந்த நிலையிலே காஞ்சிபுர ஆதீன பரமாச்சாரியாரினால் தாபிக்கப்பட்ட கொழும்பு திருநெறித் தமிழ் மன்றத்தினரோடு இணைந்து கொழும்பில் சைவசித்தாந்த மகாநாடு ஒன்றினை நடாத்த ஏற்பாடு செய்தேன். 1975ம் ஆண்டு ஆகஸ்டில் இம்முயற்சி வெற்றியளித்தது. அதன்பேறாக கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கையிலும் தெரிவு செய்த பேச்சாளருடன் பண்ணிசை, புராணபடனம், என்பவற்றுடன் "சைவசித்தாந்த எழில் ஞானப் பெருவிழா" என்ற நாமத்துடன் மூன்று நாட்கள் பெருவிழா எடுத்தோம். இதனைப் போல் பெருவிழா முன்னர் நடந்திருக்கவில்லை என்று பலரும் கூறியது கேட்கக் கூடியதாக இருந்தது. இதன் காரணமாக ஆதீனத்தின் பெயர் அதன் விரிவான சேவை அகில இலங்கையிலும் தெரிவதாயிற்று.

ஆதீனத்திற்கு தாளையன் தாபனம் நல்லாதரவு தந்தது. மாதாமாதம் ஆதீனத்திற்கு நன்கொடைகள் வழங்கி வந்துள்ளது. அதனால் அகில இலங்கையிலும் எவரிடமும் உதவி கோராது சைவசேவை புரிந்துள்ளோம். தாளையன் அச்சகம் தம்பிரான் சுவாமிகளின் சைவசித்தாந்த நூலொன்றைப் பணம் பெறாமல் அச்சேற்றித் தந்துள்ளது. அதனை நாம் இலவசமாக அனைவருக்கும் வழங்கினோம்.

ஆதீனம் "மெய்கண்டார்" என்றும் பருவகால சைவ இதழ் ஒன்றும் நடாத்தியுள்ளது. அதில் சைவசமய நெறி (ஒழுங்குகள்) பற்றிய விஷயங்களே வெளிவந்தன. ஆதீன முதல்வர் நாவலரைப்போல் கண்டனப்பேர்வழி. உண்மையென்று கண்டதைச் சொல்லத் தவறாதவர். பிழையானதை எடுத்துக் கூறி இடித்துரைக்கவும் வல்லவர். தற்போதைய முதல்வரும் அங்ஙனமானவரே. பின்னவர் எழுத்து மூலமும் கண்டனக் குரல் விடுபவர். எனது மென்மைப் போக்கு இவற்றுக்குப் புறம்பானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பொறுப்பாளர் பதவியை ஏற்றபோது குருமுதல்வர் திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக மடத்திலிருந்து ஆதீனத்தை நடாத்திக் கொண்டிருந்தார். கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களையடக்கியதாக அவர்களின் பணி தொடர்ந்தது. திருக்கேதீஸ்வரம் பாடல் பெற்ற ஒரு திருத்தலம். அங்கு ஆதீனத் தலைமை ஸ்தானம் இருப்பது சிறப்புடையது என்று கொண்டு நான் கீரிமலையைக் கிளை ஸ்தானமாக வைத்து யாழ்ப்பாணத்திற்குரிய ஆதீனப்பணிகளை மேற்கொண்டேன்.

நல்லை ஆதீனம் அப்போது செல்வாக்குற்றிருந்தது. இங்கு இரண்டு ஆதீனங்கள் வேண்டுமா என்று சிலர் குரல் கொடுக்கவுந் தொடங்கிவிட்டனர். ஆதீனத்தை மக்கள் முன்கொண்டு வர, பல உத்திகளைக் கையாண்டேன். கிராமப்புற ஆலயங்களில் உற்சவ காலங்களிலே பல அறிஞர்களை அழைத்து சைவப் பிரசங்கங் களைச் செய்வித்தல். ஒருமுறை பிரபலமான ஆலயங்களின் சைவ மன்றங்களிலே ஆதீனமுதல்வரை அழைப்பித்து அவர்களை வரவேற்புச்செய்து அருளுரை வழங்கவைத்தல், இன்னுமொருமுறை ஆலயத் தொடர்சொற்பொழிவுகளில் மாணவச் சிறுவர்களைப் பங்குபற்றச்செய்து அவர்களுக்கு தினமும் வினாக்கள் கொடுத்து அதன்பெறுபேற்றில் பரிசளிப்பு விழாநடாத்தி ஆதீனத்தை அறிமுகஞ்செய்தல் என்ற ஒருமுறை. இப்படிப் பலமுறைகளில் கிராமத்துக் கூடாகப் பட்டினம் வரையும் ஆதீனத்தை வளர்த் தெடுத்தேன்.

எனது அழைப்பை ஏற்றுச் சைவப்பிரசங்கம் செய்யவந்த பெரியோரும் தங்கள் கிராமங்களுக்கும் ஆதீனச்சேவை புரிய அழைப்புவிடுத்து உதவியும் தந்தனர். இதன் பேறாக ஆதீனத்திற்கு யாழ்ப்பாணத்தில் கலைப்புலவர் வீதியில் உள்ள தனது சொந்தத் திருவாச மன்றக் கட்டிடத்தை ஆதீனத்தலைமையகமாக்க உதவினார். அப்பெரியவரின் நல்மனதை என்றும் பாராட்டக் கடமை யுடையோம்.

அவர்பெயர் திருவாசகமணி க.மாணிக்கவாசகர் ஆகும். அவரை முதலாங்குரு முதல்வர் தனக்குப்பின்னர் தம்பிரான் சுவாமி களாக்கக் கருதியிருந்தார். அதனை வழிப்படுத்துமாறு எனக்குப் பணித்திருந்தார். இரண்டாம் குருமுதல்வரும் அந்நிலையத்திலிருந்தே இடம்பெயர்ந்த காலம்வரை ஆட்சிபுரிந்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. எங்கள் சைவப்பணி பருத்தித்துறையிலிருந்து காரை நகர்வரையும், கீரிமலையிலிருந்து கிளிநொச்சிக்குருகுலம் வரையும் பரந்து விரிந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பர ஆலயச் சொத்துக்கள் (தரும சாதனங்கள்) யாழ்ப்பாணத்தில் பாழாய் போனதைக் கண்டு அவற்றினை ஒன்று சேர்த்து நெறிப்படுத்த நானும் தம்பிரானும் முயன்றோம். அங்ஙனம் முயற்சிசெய்து கொண்டு வெற்றியளிக்கும் வேளை வந்தபோது தம்பிரான் சமாதிப்பேறு அடைந்துவிட்டார்கள். அன்னாரின் சமாதிப்பேற்று யாகதீப பூசைக்கிரியை பூர்த்தியானதன் பின் ஆதீனத்தின் இரண்டாம் குருமுதல்வர் தேடும்படலம் ஆரம்பமானது.

மெய்கண்டார் ஆதீனத்தின் தற்போதைய குருமுதல்வர் சைவாசிரிய கலாசாலையில் என்னோடு ஒன்றாகப் படித்தவர். நாம் இருவரும் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை இலக்கிய கலாநிதி அவர்களின் மாணவர்கள். இந்தவகையால் நாமிருவரும் நாவலர்களின் ஞான பரம்பரையில் வந்தவர்கள் ஆவோம்.

முதலாங்குரு முதல்வர் சமாதிப்பேறு அடைந்தபின் நடைபெற்ற தீபபூசைக் கிரியையின்போது இருவரும் சந்தித்தோம். அன்று நினைவஞ்சலிக்கூட்டத்தின்போது இவ்வாதீனத்தின் இரண்டாங்குரு முதல்வராகப் பதவியேற்று நடாத்துமாறு தற்போதைய குருமுதல்வரை வேண்டிக் கொண்டேன்.

அவர்கள் தமது அஞ்சலி உரையில் மறுத்துரைத்திருந்தார் கள். நான் அவரை ஆதீனத்திற்கு கொண்டுவர அயராது முயற்சித்தேன். அவரால் நடாத்தப்பட்டு வந்த சைவசித்தாந்த வகுப்புக்களுக்கு வாரந்தோறும் சென்று அதிலும் வேண்டுகோளை விடுக்கலானேன். வகுப்பிலிருந்த மாணவர்கள் பெரும்பாலானோர் முதியவர்கள். அவர் களுக்கும் உணர்த்தி இதற்கு உதவுமாறு வேண்டினேன். மாணவர்கள் ஆதீனப் பொறுப்பை ஏற்குமாறும் தாங்கள் பக்க பலமாக நிற்கிறோம் என்றனர். எம் கருத்தில் வெற்றி பெற்றேன்.

ஒரு சுபதினத்தில் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஆலயபூசை யுடன் மற்றுங் கிரியைகள் புரிந்து சீலத்திருஞானபரகாச சுவாமிகள் என்ற நாமத்துடன் இரண்டாங்குரு முதல்வர் என்ற பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்கள். இக்கருமங்களில் ஈடுபட்டு உழைத்தமையால் எம்மை மெய்கண்டார் ஆதீன மீள்தாபகர் என்ற பதவி தந்து சைவப் புலவர்மணி என்ற பட்டத்தையுஞ் சூட்டிக் கௌரவித்தார்கள்.

ஆதீனத்தை கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் அமைத்து (யாழ் இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) கருமங் களை ஆற்றிவந்தோம். அங்கு சிறந்தவொரு நூல் நிலையமும் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை மாணவர்கள் அங்குவந்து தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துச் செல்வர். ஆய்வுக்கு உதவியும் பெற்றனர். அங்கு குருபூசையுடன் விசேட நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட சைவசித்தாந்த சாஸ்திரப் புறநிலைப்படிப்பிற்கு ஆதீனம் தம்மாலான பணிகளைப் புரிந்து ஒரு நாள் கருத்தரங்கில் ஆதீனன முதல்வர் தலைமை தாங்கினார். சைவசித்தாந்த நூல் ஒன்று சைவசித்தாந்த உயர் நிறுவன அதிபர் சைவப்புலவர் திரு. மு. திருஞானசம்பந்தப்பிள்ளை மூலம் எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இன்னும் யாழ் இந்துக் கல்லூரியில் 1994ல் சைவசித்தாந்த மகாநாடும் முதலாங் குரு முதல்வர் குருபூசையும் நடாத்தப்பட்டமை தெளிவு.

இவற்றின் பின் நான் 3.10.95ல் வவுனியா வந்து சேர்ந்தேன். ஆதீன முதல்வர் கொழும்புக்குச் சென்றார். 96 நடுப்பகுதியில் ஆதீன குருமுதல்வர் வவுனியாவுக்கு வரவுதர மீண்டும் ஆதீனப் பணிகள் தொடருகின்றன. தங்கள் அனைவரதும் நல்லெண்ணமும், நன்மன ஆதரவும் வேண்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மெய்கண்டார் ஆதீனத்தின் சேவைகள்.

மெய்கண்டார் ஆதீனம் சமயப்பணிகளையும் சமயஅதீதப் பணி களையும் செய்துவரும் ஆதீனம்.

சமயப்பணிகள் என்றதும் திருக்கோயில், சமயச்சார்புடைய சங்கங்கள், நிறுவனங்களுடன் இணைந்தும் தனித்தும் செய்யும் பணிகள்.

இவ்வாற்றல் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, கொழும்பு, இளவாலை, வவுனியா, கீரிமலை, காரைநகர், கரம்பன் முதலிய இடங்களிலே நடாத்திய சேவைகள் மிகவும் போற்றத் தக்கவை.

கொழும்பில் இந்துமாமன்றத் தலைவர் நீதியரசர் வி.சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் 1975இல் நடைபெற்ற சைவசித்தாந்தஎழில்ஞானப் பெருவிழாவும், யாழ்ப்பாணத் தில் இந்துக் கல்லூரியில் 1994இல் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாடும் மிகவும் பிரபலமானவை.

அன்றியும் பருத்தித்துறை கோட்டடிப்பிள்ளையார் ஆலயத் திருவிழாவில் தொடர் பிரசங்கம் தம்பிரான் சுவாமிகளின் தலைமையில் நிகழ்ந்ததும் அவற்றிலே பற்பல சைவப்பேரறிஞர்கள் உரையாற்றிய மையும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று கிளிநொச்சி குருகுலத்திலும், பருத்தித் துறை பரமானந்த சுவாமிகள் ஆச்சிரமத்திலும் நிகழ்ந்த பணிகள் மிகச் சிறந்தவை.

இன்றைய முதல்வர் ஏற்படுத்திய மெய்கண்டார் சைவ சித்தாந்த உயர்நிறுவனத்துடன் ஆதீனம் இணைந்து செயற்பட்ட நிகழ்வுகள் பல்கலைக் கழகங்களே நினைத்துப் பார்க்க முடியாத மறைஞானப் பணிகளாகும்.

சமய அதீதப் பணிகளிலே மெய்கண்டார் ஆதீனம் மிகவும் ஈடுபாடு உடையதாகும். சமய சமரச நோக்கையும் மனித நேயத்தையும் அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கொழும்பு தாளையன் திருக்கூட்டத்துடன் இணைந்து பலகாலம் செயற்பட்டமை விதந்து நயந்து குறிப்பிடவேண்டியவை. இதனால் சிவஞான விளக்கம் போன்ற மறைஞான நூல்களும் வெளி யிடப்பட்டன. கரம்பன் ஆச்சிரமத்துடன் இணைந்து செய்த பணிகள் சமயசமரச நோக்கையும் மறைஞானத்தையும் அடியொற்றிய பணிகளாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்போதைய குருமுதல்வர்
சீலத்திரு ஞானப்பிரகாச சிவம்

மெய்கண்டான் பருவகால வெளியீடு பருத்தித்துறையிலிருந்து வெளிவந்தது. அது போலவே இன்றைய முதல்வரால் சிவஞானப்பிரகாசம், சைவசமய வரலாறு முதலிய பிரசுரங்கள் வெளிவந்தன. இவை இலவச வெளியீடுகளாகும்.

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை, ஜேர்மன் சுவாமிகளின் சும்மா இருக்கச் சூத்திரம், சீகாழிசிற்றம்பல நாடிகளின் திருச்செந்தூர் அகவல் போன்றவை மறைஞானம் பெற மிகவும் உகந்தவை என ஆதீனம் பிரசுர மூலம் பிரசாரம் செய்துள்ளது.

சைவப் பாதுகாப்புச் சேவை மெய்கண்டான் குரல் முதலிய கையெழுத்துப் பத்திரிகைகள் மூலமும் கையெழுத்து நூல்கள் மூலமும் சைவசமயத்தையும், மறைஞானத்தையும் பாதுகாத்துப் பிரசாரம் செய்து வருவதிலே மெய்கண்டார் ஆதீனம் தலைசிறந்து விளங்குகின்றது.

இப்போதைய குருமுதல்வர் பற்றியவை "முதல்வர் ஒருவர் தேவை" என்னும் பிரசுரத்திலுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# மெய்கண்ட தேவ நாயனார் அருளிச் செய்த சிவஞான போதம்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே

## 1. பொது இயல்பு

பிரமாண இயல்

### முதற்சூத்திரம் (பதி உண்மை)

அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

### இரண்டாஞ் சூத்திரம் (பாச உண்மை)

அவையே தானே ஆய்இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

### மூன்றாஞ் சூத்திரம் (பசு உண்மை)

உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்ந்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவின்உள் ஆன்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. இலக்கண இயல்

நான்காம் சூத்திரம் (பசு இலக்கணம்)

அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே

ஐந்தாம் சூத்திரம் (பாச இலக்கணம்)

விளம்பிய உள்ளத்து மெய்வாய்கண் மூக்கு
அளந்து அறிந்து அறியா ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமி அருள்
காந்தம் கண்ட பசாசத்து அவையே

ஆறாஞ் சூத்திரம் (பதியின் சொரூப இலக்கணம்)

உணர்உரு அசத்துஎனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்கும் மன்உலகே

**2. உண்மை இயல்பு**

3. சாதன இயல்

ஏழாஞ் சூத்திரம் (பசுவின் சிறப்பு இலக்கணம்)

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்துஇலது அறியாது
இருதிறன் அறிவுஉளது இரண்டு அலா ஆன்மா.

எட்டாஞ் சூத்திரம் (குருவுமாய் உணர்த்தும் முறை)

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவும்ஆய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாஞ் சூத்திரம் (ஆன்மா சுத்தி)

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதி விதி எண்ணும் அஞ்சு எழுத்தே

# 4. பயனியல்

## பத்தாம் சூத்திரம் (பாசநீக்கம்)

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன்ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

## பதினொன்றாங் சூத்திரம் (சிவப்பேறு)

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

## பன்னிரண்டாஞ் சூத்திரம் ( சீவன்முத்தி)

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

**(கருத்துரை, மேற்கோள், ஏது, உதாரணங்களும் உள)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய குரவர்கள்



திருஞான சம்பந்தர்



திருநாவுக்கரசர்



சுந்தரர்



மாணிக்கவாசகர்

'நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே'

சுதன் அச்சகம் - வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org